[25th October 1971

சந்தர்ப்பங்களில் வேண்டும்போது வேண்டிய மருந்து கிடைக்காமலும், இருக்கின்றது. சில சமயம் சில மருந்துகளை விலை அதிகமாகக் கொடுத்தும் வாங்க வேண்டியிருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு விவசாயிகளைக் கலந்துகொண்டு அதற்குப் பிறகு மருந்து அடிக்கும் நிலைமையை அரசு ஏற்படுத்துமா?

மாண்புமிகு அ. பெ. தர்மலிங்கம் : இந்த மருந்துகளைப் பற்றி ஆராய்வதற்கு அரசாங்கம் ஒரு குழுவை நியமித்திருக்கிறது. அரசாங்கம் எந்தெந்த மருந்துகளைப் பயன்படுத்தலாம் என்று அத்தாட்சி கொடுத்த பிறகு, அதைப் பெற்றுக்கொடுத்தால், அதை இந்தக் குழு பரிசீலனை செய்கிறது. பரிசீலனைக்குப் பிறகு அவர்கள் இன்னின்ன மருந்துகளை வாங்கலாம் என்று சொல்வது ஒரு வகை. இன்னொரு வகை, சற்று விலை அதிகமாக இருந்தாலும் பரவாயில்லை, சில மருந்துகள் தேவை என்று விவசாயிகள் சொன்னால், அதைச் சிபாரிசு செய்வது. விலை அதிகமாக இருந்தாலும், அதை அவர்கள் இஷ்டப்படி வாங்குகிறார்கள். விலை குறைவாகவும் ரேட் காண்ட்ராக்ட் முறையில் வாங்கவும் செய்கிறார்கள். சில இடங்களில் விவசாயிகள் உதாரணமாக ஃபாலிடால் வேண்டுமென்கிறார்கள். அது விலை அதிகமுள்ள பூச்சி மருந்து. அதை உபயோகித்தால் லாபகரமாக இருக்கிறது என்று விவசாயிகள் விலை அதிகமாக இருந்தாலும் விரும்பி வாங்குகிறார்கள். ஆகவே அதற்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை.

Higher Rates for Electricity

* 33 *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have agreed to pay higher rates for electricity to Kerala Government as per the renewed agreement in 1970;

(*b*) if so, the additional expenditure to be incurred for a year; and

(*c*) the reasons for the increase in rates?

மின்சக்தி கட்டண உயர்வு.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ல் புதுப்பித்துக் கொண்ட ஒப்பந்தத்தின்படி மின்சக்திக்காக அதிகக் கட்டணங்களை கேரள அரசுக்குக் கொடுக்க இவ்வரசு ஒப்புக்கொண்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், ஓராண்டுக்கு ஏற்படக்கூடிய கூடுதல் செலவு எவ்வளவு?

(உ) கட்டண வீதங்களில் ஏற்பட்ட உயர்வுக்குக் காரணங்கள் யாவை?

25th October 1971

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: (அ) ஆம்.

(இ) ஒரு ஆண்டுக்கு கூடுதல் செலவு, அந்த ஆண்டு கேரளாவி லிருந்து பெறும் மின்சக்தி அளவைப் பொறுத்ததாகும். ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்ட முதல் ஆண்டில், சுமார் 17 கோடி யூனிட்டுகள் கேரளாவிலிருந்து பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காகும் கூடுதல் செலவு ரூ. 12.25 லட்சம் என்று மதிப்பிடப் படுகிறது.

(உ) 1969-ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட பழைய கட்டணத்துக்கே 1970-71 ஆண்டிலும் மின்சக்தியைத் தொடர்ந்து வழங்க, கேரள அரசு ஒப்புக் கொள்ளவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: முன்னால் ஒரு யூனிட்டுக்கு எவ்வளவு கொடுத்து வந்தோம்? இப்போது ஒரு யூனிட்டுக்கு எவ்வளவு கொடுக்கிறோம்?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: துணைத் தலைவர் அவர்களே, முன்னால் ஒரு யூனிட்டுக்கு 4.5 காசு, இப்போது 5.25 காசு. முதல் 15 கோடி யூனிட்டுக்கு அந்தவிலை. இரண்டாவது 15 கோடி யூனிட்டுக்கு 5 காசு.

திரு. ஜி. சுவாமிநாதன்: அதற்கு மேல் உள்ளதற்கு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: அதற்கு மேல் 30 கோடி யூனிட்டுக்கு மேல் போனால் 5.25 காசுதான்.

திரு. ஜி. சுவாமிநாதன்: முதலிலுள்ள 150 மில்லியன் யூனிட்டுக்கு 5.25 காசும் அடுத்தபடி 15 மில்லியனுக்கு மேல் 4.5 காசும் அதற்குப் பிறகு மறுபடியும் அதிகமாகி 5.25 காசும் ஆவதற்குக் காரணம் என்ன? குறைந்து அல்லவா இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: ஒரு மாநிலத்திலிருந்து மின்சாரம் பெற வேண்டுமென்றால் அவர்களுக்கு வேண்டியது போக உபரி இருப்பதைத்தான் கொடுக்க வேண்டும். இப்போதுள்ள திட்டப்படி 40 கோடி யூனிட்டுகள்தான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். அதற்கு மேல் வேண்டுமென்று சொன்னால் அதிகமாகப் பணம் கொடுத்துத்தான் வாங்க வேண்டி யிருக்கிறது.

UNSTARRE. QUESTIONS.

Blood Donations

1 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the total quantity of blood donations received by the Blood Banks in Madras City during 1970-71; and

(*b*) the amount spent for this blood collections?

A.—(*a*) 4973.925 litres.

(*b*) Rs. 1,53,530.10.